# 2. தேசிய வருமானமும் செலவும்

## 2.1 பொதுவான போக்குகள்

1997 இல் உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து முன்னைய ஆண்டின் மிதமான பொருளாதார செயலாற்றத்திலிருந்து உறுதியாக மீட்சியடைந்தது. 1997 இன் மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம் 1992-1996 5 ஆண்டுக் காலப் பகுதியின் சராசரி வளர்ச்சி வீதமான 5.2 சதவீதத்தினைவிட உயர்வாக இருந்தது. 1996இன் முதலரைப் பகுதியில் காணப்பட்ட பின்னடைவினைத் தொடர்ந்து பின்னரைப் பகுதியில் பொருளாதாரம் மீட்சியடைந்ததுடன் 1997 இல் வளர்ச்சி செய்முறை விரைவடைந்துள்ளது. 1996 இல் காணப்பட்ட நீண்ட வரட்சியினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வேளாண்மைத் துறை 1997 இல் மீட்சியடைந்தது. 1997 இல் தயாரிப்பு, கட்டடவாக்கம், மற்றும் பணிகள் துறைகளும் சிறந்த முறையில் செயலாற்றி விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்தன.

வெளிநாட்டி லிருந்தான தேறிய காரணி வருவாய்களுக்கு சீராக்கம் செய்யப்பட்ட மொ.உ. உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி 6.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் அதிகரித்தமைக்கு முதலீட்டு வருமானப் பெறுகை களில் ஏற்பட்ட அதிகரிப்பு, வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்ட உயர்ந்த மட்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் மீதான வட்டிவருவாயின் பிரதிபலிப்பு, மற்றும் வெளி நாட்டுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவே காரணமாகும்.

நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ. உற்பத்தி ரூ. 890 பில்லியன் என மதிப்பிடப் பட்டுள்ளது. 1997இல் நடுவாண்டுக் குடித்தொகை 1.3 சதவீதத்தினால் 18.6 மில்லியனுக்கு அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, 1997 இல் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ரூ.47,999 இற்கு (ஐ.அ.டொலர் 814) உயர்வடைந்திருக்கிறது. இலங்கை நடுத்தர வருமானமுடைய நாடொன்றின் வருமான மட்டத்தைப் படிப்படியாக அடைந்து வருவதுடன் இதன் காரணமாக மேலதிக அபிவிருத்தி வேலைகளுக்கான சலுகை மற்றும் வெளிநாட்டு நிதியங்களைப் பெற்றுக்கொள்ளல் படிப்படியாகக் குறைவடையும். எனவே எதிர் காலத்தில், அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான நிதியை வெளிநாட்டு மூலதனச் சந்தைகளினூடாக திரட்ட வேண்டியிருக்கும் பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கைக்கான அடையாள வட்டி வீதமொன்றை நிறுவும் நோக்கில், 1997 மார்ச்சில் அரசாங்கம் பன்னாட்டு மூலதனச் சந்தையில் ஐ.அ.டொலர்கள் 50 மில்லியனுக்கான வழங்கலைத் திரட்டுவதில் வெற்றிகரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1997 இல் உள்நாட்டு முதலீட்டிற்கான சூழ்நிலை மிகச் சாதகமாக மாறியது. வட்டி வீதங்களின் குறைப்பு, மிதமான பணவீக்கம் மற்றும் மேம்பட்ட இறைஒழுங்கு என்பன அதிகளவிற்கு அடிக்கடி மாற்றமடையும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளின் பின்னணியில் உள்நாட்டுச் சந்தைகள் சார்பு ரீதியில் உறுதியான தன்மைகளைப் பேணுவதற்கு உதவின. மேம்பட்ட பொருளாதார அடிப்படைகள் வாணிப நம்பிக்கையின் பெருமளவு அதிகரிப்புக்கு ஆதரவு வழங்கியதுடன் 1997 இன் பொருளாதார வளர்ச்சி வீதத்தின் மீதும் சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. உயர்ந்த வளர்ச்சி வீதமும் முன்னைய ஆண்டின் மந்த நிலைமைகளிலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியடைந்தமையைப் பிரதிபலித்தன. இவ்வாண்டுக்காலத்தில் பங்குச் சந்தையில் சிறிதளவு முன்னேற்றமும் கம்பனி இலாபங்களில் மேம்பாடும் காணப்பட்டது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களிலும் அதிகரிப்புக்கள் காணப்பட்டதெனினும் கிழக்குப் பிராந்தியத்திலிருந்தான உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களிலும் பார்க்க குறைவாக இருந்தமைக்கு, இந்நாடுகளில் காணப்பட்ட நாணய நெருக்கடியின் காரணமாக உறுதியளிக்கப்பட்ட இந்நாடுகள் சிலவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீடு தடுக்கப்பட்டிருந்தமையே காரணமாகும். 1997 இல் தொழிலாளர் அமைதியின்மையும் இலகுவாக்கப்பட்டது. எனினும், குறிப்பாக தொழிலாளர் சந்தைகள், உட்கட்டமைப்பு என்பனவற்றில் காணப்பட்ட நெகிழ்ச்சியற்ற தன்மை தனியார் முதலீடுகளின் விரைந்த வளர்ச்சிக்கு தொடர்ந்தும் தடையாக இருந்தவேளையில் உயர்ந்த பாதுகாப்புச் செலவினமும் உற்பத்தி முதலீடுகளிலிருந்து மூலவளங்களை ஈர்த்து வருகின்றது. இத்தகைய நிலைமைகள் காணப்பட்டபோதிலும் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம், மொ.உ.உற்பத்திக்கான அதன் விகிதத்தினை 1996 இலும் பார்க்க சிறிதளவு உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்துள்ளது.

வேளாண்மைத்துறை உண்மை நியதிகளில் 3.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து 1997 இன்

**அட்டவணை 2.1**

**(1982)விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | சதவீத அதிகரிப்பு (%) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | 1996(அ) | 1997(அ) | 1996(அ) | 1997(அ) | 1996(அ) | 1997(அ) |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில் கடற்றொழில் | -4.6 | 3.1 | -29.4 | 8.4 | 18.8 | 18.1 |
| வேளாண்மை | -5.1 | 3.0 | -27.7 | 6.9 | 15.8 | 15.2 |
| தேயிலை | 5.1 | 7.2 | 3.0 | 2.0 | 1.9 | 1.9 |
| இறப்பர் | 6.3 | -5.8 | 0.8 | -0.4 | 0.4 | 0.4 |
| தெங்கு | -7.6 | 3.3 | -5.1 | 0.9 | 1.9 | 1.9 |
| நெல் | -26.7 | 8.6 | -35.7 | 3.8 | 3.0 | 3.1 |
| ஏனையவை | 3.5 | 0.4 | 9.3 | 0.6 | 8.5 | 8.0 |
| காட்டுத் தொழில் | 1.3 | 1.3 | 0.5 | 0.2 | 1.3 | 1.2 |
| கடற்றொழில் | -3.9 | 5.0 | -2.2 | 1.2 | 1.7 | 1.6 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் | 8.9 | 3.4 | 6.8 | 1.3 | 2.6 | 2.5 |
| 3. தயாரிப்புத் தொழில் | 6.5 | 9.3 | 42.5 | 28.9 | 21.3 | 21.8 |
| தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டுப் பதனிடல் | 1.0 | 3.0 | 0.7 | 1.0 | 2.2 | 2.1 |
| தொழிற்சாலைக் கைத்தொழில் | 7.3 | 10.3 | 38.9 | 26.4 | 17.7 | 18.2 |
| சிறு கைத்தொழில் | 6.3 | 7.0 | 2.9 | 1.5 | 1.5 | 1.5 |
| 4. கட்டடவாக்கம் | 3.4 | 5.4 | 7.4 | 5.5 | 7.0 | 6.9 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் | -2.0 | 8.0 | -1.0 | 1.7 | 1.5 | 1.5 |
| இதில்: மின்வலு, | -3.8 | 8.0 | -1.7 | 1.5 | | |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பு | 7.5 | 7.8 | 26.7 | 13.4 | 11.8 | 11.9 |
| இதில்: | | | | | | |
| தொடர்பு | 25.2 | 33.1 | 8.7 | 6.4 | | |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் | 5.2 | 6.5 | 35.2 | 21.0 | 22.1 | 22.0 |
| இறக்குமதி | 7.4 | 9.0 | 21.0 | 12.3 | 9.4 | 9.6 |
| ஏற்றுமதி | 8.2 | 11.6 | 8.3 | 5.7 | 3.4 | 3.5 |
| உள்நாடு | 2.0 | 2.2 | 5.9 | 3.0 | 9.3 | 8.9 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 10.1 | 9.8 | 18.6 | 8.9 | 6.2 | 6.4 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை | 1.3 | 1.2 | 1.0 | 0.4 | 2.3 | 2.2 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 5.0 | 4.4 | 6.8 | 2.8 | 4.4 | 4.3 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.0 | 5.8 | 4.7 | 3.2 | 3.8 | 3.8 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 3.8 | 6.4 | 119.5 | 95.5 | 101.8 | 101.4 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி | | | -19.5 | 4.5 | -1.8 | -1.4 |
| 14. மொத்த தேசிய உற்பத்தி | 3.2 | 6.9 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சிக்கு 8.4 சதவீதம் பங்களித்தது. மூன்று முக்கிய வேளாண்மைப் பயிர்களான தேயிலை, தெங்கு, நெல் என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்த வேளையில் இறப்பரின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. தேயிலை உற்பத்தி முன்னைய ஆண்டினைவிட 7.2 சதவீதம் கொண்ட மேலுமொரு வளர்ச்சியை பதிவு செய்ததுடன் 277 மில்லியன் கிலோகிறாம் கொண்ட புதிய உச்ச மட்ட உற்பத்தியையும் அடைந்தது. 1993ஆம் ஆண்டிலிருந்து தேயிலை உற்பத்தி தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருவது முக்கியமானதொரு பண்பாகும். தேயிலை உற்பத்தியாளர்கள் 1996 இலும் 1997இலும் பன்னாட்டுத் தேயிலை விலைகளில் காணப்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பிலிருந்தான நன்மைகளைப் பெற்றனர். 1997 இல் நெல் உற்பத்தி 8.6 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இது அரிசி இறக்குமதிச் செலவைக் குறைப்பதற்கும் உதவியது. வானிலை நிலைமைகளின் காரணமாக ஏற்படும் உற்பத்தி நன்மைகளை அடைய ஏறத்தாள ஓராண்டு செல்லும் என்பதனால் தெங்குத் துணைத்துறையின் மீட்சி மெதுவாகவே இருந்தது. 1996 இல் பின்னடைவினைக் கொண்டிருந்த மீன்பிடித் துணைத்துறையும் இவ்வாண்டில் மீட்சியடைந்து கடல்மீன்பிடி மற்றும் நன்னீர் மீன்பிடி என்பனவற்றின் வெளியீடுகளில் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன.

1997 இல் தயாரிப்புத்துறை 1996 இன் 6.5 சதவீதத்துடன் ஒப்பிடுகைளில் 9.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்தப் பொருளாதார

வளர்ச்சியில் 29 சதவீதத்திற்கு பங்களித்தது. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் தூண்டுதலை வழங்கின. கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகள் கைத்தொழில் பொருட்களின் உற்பத்தியின் ஏறத்தாள மூன்றில் இரண்டு பங்கிற்கு வகை கூறியதுடன் தயாரிப்புத்துறை மிக முக்கியமான துணைத்துறையாகவும் விளங்கியது.கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிப் பெறுமதி 1996 இன் ஐ.அ.டொலர் 3,006 மில்லியனிலிருந்து 1997 இல் ஐ.அ.டொலர் 3,436 மில்லியனுக்கு 14.3 சதவீதத்தினால் அதிகரித்தது. தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 1996இன் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 11.1 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏற்றுமதி கேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சிக்குப் புறம்பாக, 1997இல் தயாரிப்புத்துறையின் செயலாற்றம் மேம்பாடடைவதற்கு உதவிய முக்கிய காரணிகளாக மின் உருவாக்க இயலளவில் ஏற்பட்ட அதிகரிப்பு, கைத்தொழில் தொழிலாளர்களின் அமைதியின்மை குறைக்கப்பட்டமை கடந்த இரண்டு வரவுசெலவுத் திட்டங்களிலும் வழங்கப்பட்ட கைத்தொழில் துறைக்கான ஊக்குவிப்புக்கள் என்பன காணப்பட்டன.

ஆண்டின் முதலரைப்பகுதியில் நீர்மின்வலு உருவாக்கத்தில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் இலங்கை மின் சபையினதும் தனியார் துறையினதும் அதிகரித்த வெப்பவலு உருவாக்கம் 1997இல் மின்வலுத் தடங்கல்களை தவிர்ப்பதற்கு உதவின. 1997இல் மூன்று புதிய வெப்ப மின்வலு வழங்கல் நிலையங்கள் தொடங்கப்பட்டதுடன் தேசியமின் தொகுதிக்கூடாக வழங்கப்பட்ட மின்வலுவின் நிறுவப்பட்ட உருவாக்க இயலளவு 12 சதவீதத்தினால் அதிகரித்தது. 65 சதவீதமான நீர் மின் வலுவையும் 35 சதவீதமான வெப்ப மின்வலுவையும் கலந்த மின் வழங்கல் நீர் மின்வலுவின் மீது அதிகளவிற்கு தங்கியிருப்பதனைக் குறைத்து மிக நம்பகரமான மின் வழங்கல் நிலைமையைத் தோற்றுவித்தது. இலங்கை மின் சபையினால் உருவாக்கப்பட்ட மின்வலுவின் இயலளவு 1992 இல் சமனலவேவ நீர் மின்வலுச் செயற்றிட்டம் ஆரம்பமாகிய பின்னர் முதற் தடவையாக 1997 இல் அதிகரித்துள்ளது. பணிகள்துறை முன்னைய ஆண்டினைவிட சிறந்த முறையில் செயலாற்றி வேளாண்மை, தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கங்கள் துறைகளின் விரிவாக்கத்துடன் இணைந்திருந்த பணிகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சியையும் சுற்றுலாத் துறையின் மீட்சியையும் பிரதிபலித்தது. மேலும் நிதி, துறைமுகமும் கப்பல் திருத்தலும் பணிகள் மற்றும் தொடர்பூட்டல் ஆகிய துணைத் துறைகளில் இடம் பெற்ற நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்க நிகழ்ச்சித் திட்டங்கள் பணிகள் துறையின் அதிகரித்த வெளியீடுகளுக்கு பங்களித்தன. 1997 இல் 7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த பணிகள்துறை உண்மை மொ.தே.உற்பத்தியின் 56 சதவீத அதிகரிப்பிற்கு உதவியது. இத்துறை 1997 இன் மொ.தே. உற்பத்தியின் 51 சதவீதத்திற்கு வகைகூறியது.

1997 இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ.உ.உற்பத்தி ரூ.804 பில்லியனுக்கு 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி பொருளாதாரத்தில் பொதுவான விலை மட்டங்களின் அளவையொன்றான உட்கிடை மொ.உ.உற்பத்தி விலைச் சுருக்கி 1996 இன் 12.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 1997 இல் ஏனைய கூட்டு விலைக் குறிகாட்டிகளின் போக்குகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

1997 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூ.953 பில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் இது 13.9 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மொத்தச் செலவினத்தில் பாரிய பங்கினைக் கொண்டிருக்கும் நுகர்வுச் செலவு 1997 இல் 13.2 சதவீதத்தினால் அதிகரித்தது. 1997 இல் நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட 7-10 சதவீத அதிகரிப்புடன் தொடர்பானவற்றை நோக்குகையில், இது உண்மை நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. எனினும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நுகர்வு வீழ்ச்சியடைந்துள்ளமையானது, உண்மை வட்டிவீதங்களில் குறைப்புக் காணப்பட்டபோதும் தலைக்குரிய வருமான அதிகரிப்பின் காரணமாக சேமிக்கும் மனப்பாங்கு சிறிதளவு அதிகரித்துள்ளமையைப் பிரதிபலிப்பது முக்கியமானதொரு அம்சமாகும். , சாத்தியமான மட்டத்தில் உண்மை வட்டிவீதங்களை பேணுவதன் மூலமும் வைப்பாளர்களை நியாயமான முறையில் கவர்வதன் மூலமும் இவ்வதிகரிப்பினை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். 1997 இல் நடைமுறை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினம் 1996 இன் 16.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997இல் 13.1 சதவீதத்தில் அதிகரித்தது. நுகர்வுச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு, விற்பனை மற்றும் பணிகள் வரியின் சேகரிப்பில் ஏற்பட்ட உயர்வு, பயணிகள் உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகள் புதிய

பதிவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு போன்ற குறிகாட்டிகளினால் பிரதிபலிக்கப்பட்டது. 1997 இல் போக்குவரத்து, தொடர்பூட்டல் மற்றும் மின்வலு என்பனவற்றை உள்ளடக்கிய பணிகளுக்கான குடும்ப அலகுகளின் கேள்வியும் விரிவடைந்தது. அரச நிறுவனங்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகள், பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவு என்பனற்றை உள்ளடக்கிய அரச நுகர்வுச் செலவினம் 1996 இன் 5.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 13.8 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

1997இல் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ரூ.217 பில்லியனுக்கு 16.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1997 இல் மொ.உ.உற்பத்திக்கான மொத்த உள்நாட்டு மூலதன வாக்கத்தின் விகிதம் 1996 இன் 24.2 சதவீதத்திலிருந்து 24.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. தனியார் முதலீடு மொ.உ.உற்பத்தியின் 18 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 18.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் அரச முதலீடு 1996 இன் 6.2 சதவீதத்திலிருந்து 1997 இல் 5.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மூலதனமயமாக்கலில் ஏற்பட்ட விரிவாக்கம் மூலதனப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட உயர்வு, முக்கிய கட்டடவாக்கப் பொருட்களின் விற்பனை அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, வங்கித்தொழில் முறையினால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட வளர்ச்சி வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறு குறிகாட்டிகளினால் பிரதிபலிக்கப்பட்டது. பொது முதலீட்டின் மைய நிகழ்ச்சித் திட்டங்களாக மனித மூலவள அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு என்பன காணப்பட்டன. இவை திரண்ட பொது முதலீட்டின் 53 சதவீதத்திற்கு வகை கூறின. மொத்த அரச முதலீட்டு உள்நாட்டுச் சேமிப்புக்கள் விகிதம் 1996 இன் 15.3 சதவீதத்திலிருந்து 1997 இல் 17.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. செலவினங்களை ஒழுங்கு முறைப்படுத்தி அரச செலவினங்களை சிக்கனப்படுத்தியமை உயர்ந்த கூட்டுச் சேமிப்புக்களின் காரணமாக தனியார்துறைச் சேமிப்புக்களை அதிகரித்தமை என்பனவற்றினூடாக அரசின் எதிர்க்கணிய சேமிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி 1996 உடன் ஒப்பிடுகையில் 1997 இல் உயர்ந்த சேமிப்பு வீதத்தினை தோற்றுவித்தது. தேசிய சேமிப்பு விகிதம் 1996 இன் 19.0 சதவீதத்திலிருந்து 1997 இல் 21.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## 2.2 துறைவாரியான செயலாற்றம்

1997 இல் காடாக்கல் மற்றும் மீன்பிடி என்பனவற்றினையும் உள்ளடக்கிய வேளாண்மைத் துறை 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு தேயிலையில் ஏற்பட்ட வளர்ச்சியும், நெல், தெங்கு மற்றும் மீன்பிடித் துணைத்துறைகள் மீட்சியடைந்தமையுமே காரணமாகும். 1996/97 பெரும்போகம், 1997 சிறுபோகம் ஆகிய காலப்பகுதிகளில் நெல்லின் இணைந்த உற்பத்தி 2.24 மில்லியன் மெற்றிக் தொன்களென மதிப்பிடப்பட்டு, 1996 இன் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 8.6 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. பெருந் தோட்டத் துறையை முழுமையாகப் பார்க்கையில் அது 1997 இல் நன்கு செயலாற்றியிருக்கின்றது. தேயிலை உற்பத்தி 7.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தனியார்துறையின் கீழ் முகாமைத்துவம் மேம்பட்டமையும் தெங்கு உற்பத்தி 3.3 சதவீதமான மிதமான மீட்சியைக் கொண்டிருந்தமையுமே முக்கிய காரணங்களாகும். 1997 இல் கொழும்பு ஏலங்களில் தேயிலைக்கான சராசரி விலை கி.கிராமிற்கு ரூ.119.40 ஆக அமைந்து 1996 இன் சராசரி விலைகளுடன் ஒப்பிடுகையில் 14.5 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இறுக்கமான உலக வழங்கல் நிலைமையும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்திலிருந்து இலங்கைத் தேயிலைக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வியுமே உயர்ந்த விலைகளுக்கு பெருமளவிற்குக் காரணமாகும். உயர்ந்த விலைகள், தேயிலைத் துணைத்துறையின் உயர்ந்து செல்லும் உற்பத்தியாளர் இலாபங்களைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுவதனால் இது தேயிலைத் பெருந்தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் முதலீடுகளை இயலச் செய்யும். 1997 இல் இறப்பர் உற்பத்தி 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இறுதிக் காலாண்டில் பாரிய மழை வீழ்ச்சியினால் உற்பத்தி பாதிக்கப்பட்டமையே காரணமாகும். மேலும் உற்பத்தியாளர் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் உற்பத்தியாளர் இலாபங்கள் குறைவடைய வழி வகுத்த வேளையில் தொடர்ச்சியான தொழிலாளர் பற்றாக்குறையின் காரணமாக உற்பத்திச் செலவில் மேல் நோக்கிய அழுத்தம் காணப்பட்டது.

மொத்த வேளாண்மைத் துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் 52 சதவீதத்திற்கு வகை கூறும் ஏனைய வேளாண்மை 1997 இல் 0.5 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. இத்துணைத் துறையில் காய்கறிகள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு உற்பத்திகள்

என்பனவற்றில் உற்பத்தி அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்ட வேளையில் துணை உணவுப் பயிர்கள், பழவகை, கரும்பு என்பனவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. இத்துணைத் துறையில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியானது 1996 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் வளமாக்கிப் பாவனையில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் (5 சதவீதத்தினால்) மற்றும் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறி என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதியிலும் பிரதிபலிக்கப்பட்டது.

1996 இல் பின்னடைவினைக் கொண்டிருந்த மீன்பிடித்துணைத் துறையும், கடல் மற்றும் நன்னீர் மீன் உற்பத்திகள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தமையின் மூலம் மீட்சியடைந்தது. இதன்படி, மீன்பிடித் துணைத்துறையின் வெளியீடு, 1996 இன் 228,550 மெற்றிக் தொன்களிலிருந்து 1997 இல் 240,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தமையின் காரணமாக 5 சதவீதத்தினால் வளர்ச்சிகண்டது.

கட்டடவாக்க நடவடிக்கைகளின் விரிவாக்கம் காரணமாக 1997 இல் சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் துறை 3.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, முக்கிய கல்லுடைத்தல் உற்பத்திகள், மற்றும் கூட்டுக்கற்கள், செங்கட்டிகள் மற்றும் ஓடுகளுக்கான களிமண் என்பனவற்றின் வெளியீடு அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. எனினும் இவ்வளர்ச்சி வீதம் 1996 இனைவிட குறைவானதாகும். இரத்தினக்கற்கள் மற்றும் கவுடா கற்களுக்கான ஏற்றுமதிக் கேள்வி ஆண்டின் பின்னரைப் பகுதியில் மெதுவடைந்தமைக்கு கிழக்காசியாவில் காணப்பட்ட நிதியியல் சந்தை மற்றும் நாணய நெருக்கடியும் யப்பானிலிருந்தான கேள்வி வீழ்ச்சியடைந்தமையுமே காரணங்களாகும். 1997 இல் கனிப்பொருள், மணல், மற்றும் காரீயம் என்பனவற்றைப் பிரித்தெடுப்பதும் வீழ்ச்சியடைந்தது. 1997 இல் கனிப் பொருள்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 1996 இனைப் போன்று ஐ.அ.டொலர் 90 மில்லியனாகக் காணப்பட்ட வேளையில் 1997 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட கனிப்பொருட்களின் அளவு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

தொழிற்சாலைக் கைத்தொழில், தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டுப் பொருட்கள் என்பவற்றின் பதனிடல் மற்றும் சிறு கைத்தொழில்களை உள்ளடக்கிய தயாரிப்புத்துறை 1996 இன் 6.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1997 இல் 9.3 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. முழுத் தயாரிப்புத்துறையிலும் 80 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கைக் கொண்டிருக்கும் தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத்துறையானது தொழிலாளர், அமைதியின்மைக் குறைப்பு, கைத்தொழில் உற்பத்திகளுக்கான வலுவான வெளிநாட்டுக் கேள்வி, மற்றும் 1997 வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்ட மேலதிக ஊக்குவிப்புக்கள் என்பனவற்றின் பின்னணியில் உண்மை நியதிகளில் 10.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1997 இல் ஆடை ஏற்றுமதிகள், தொடர்ந்தும் முன்னணி வகித்தமையைத் தொடர்ந்து ஏற்றுமதி அளவு 11.8 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தமையின் காரணமாக அளவு ரீதியில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. தோல் மற்றும் இறப்பர் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் கணிசமான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகள் ரூ. 203 பில்லியனாக அமைந்து 1997 இல் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களில் 74 சதவீதத்திற்கு வகை கூறியது. தேயிலை மற்றும் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 1996 இன் 1.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வேளாண்மைப் பதனிடல் கைத்தொழிலின் உயர்ந்த வளர்ச்சி வீதத்திற்கு (3 சதவீதம்) வழிவகுத்தது.

சிறு கைத்தொழில்கள் துணைத்துறையில் 7.0 சதவீதங் கொண்ட வளர்ச்சி வீதம் பதிவு செய்யப்பட்டது. வேளாண்மை மீட்சியடைந்தமை, கட்டடவாக்க நடவடிக்கைகள் விரிவடைந்தமை, சுற்றுலாவின் அதிகரிப்பு என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1997 இல் சிறு கைத்தொழில்கள் துணைத்துறை சிறந்த செயலாற்றத்தினைக் காட்டுவதற்கு வழிவகுத்தன. நெல் ஆலையிடுதல், ஏனைய பெருந்தோட்டமல்லா பயிர்களின் வேளாண்மைப்பதனிடல் கைத்தொழில் செங்கட்டித் தயாரிப்பு, மரவேலை மற்றும் கட்டடவாக்கக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட உலோக உருவமைப்பு வேலைகள் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு முக்கியமாக உற்பத்திப் பொருட்களை வழங்கும் கைவினைக் கைத்தொழில் என்பன இவ்வாண்டில் விரிவடைந்தன. தொழில் உருவாக்கம், கிராமியப் பிரதேசங்களுக்கு கைத்தொழில் உற்பத்திகள் பரவலாக்கப்பட்டமை உற்பத்தியில் துறைகளுக்கிடையிலான இணைப்புக்கள் அபிவிருத்தியடைந்தமை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் சிறு கைத்தொழில்கள் மிக முக்கியமான பங்கினையாற்றியுள்ளன. இப்பண்புகளை அங்கீகரிக்கின்ற விதத்தில் , தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற சிறுகைத்தொழில்களுக்கு வரி விடுப்புக்கள், மொத்த

விற்பனைவரித் தீர்வைத் தளர்த்தல்கள் போன்ற பாரிய அளவு கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட சில ஊக்குவிப்புக்களை 1997 வரவு செலவுத் திட்டத்தினூடாக அரசாங்கம் வழங்கியது. அண்மைய ஆண்டுகளில் சிறு கைத்தொழில் துணைத்துறையில் இடம்பெற்ற மிக முக்கியமான அபிவிருத்தி யாதெனில் சிறு அளவுத் தொழில் முயற்சிகளினால் அதிகளவிற்கு மேற்கொள்ளப் பட்டுவரும் கணனிகள், தொடர்பூட்டல் கருவிகள், மற்றும் மின்னியல் கருவிகளின் உடற்கோப்பாகும். குறிப்பாக கல்விகற்ற மற்றும் தொழில்நுட்ப ரீதியாக தேர்ச்சிபெற்ற தொழிற்படைக்கு தொழில்களை வழங்குகின்ற வழியாக உள்ளது என்ற பின்னணியில் இவ்வுயர்ந்த தொழில் நுட்பக் கைத்தொழில்களை நோக்கி நகர்வது நல்ல குறிகாட்டியாகும்.

1997 இல் கட்டடவாக்கத்துறை 1996 இன் 3.4 சதவீதம் கொண்ட குறைந்தளவு வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. கட்டடவாக்கம் விரிவடைந்த மைக்கு வதிவிட மற்றும் வர்த்தக நோக்கங்களுக்கான கட்டடங்களின் கட்டுமானத்திலும் வீதிக் கட்டுமானம் மற்றும் நீர்ப்பாசன முறைகளின் புனரமைப்பு மற்றும் பேணலிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணங்களாகும். இப் போக்கு, சீமெந்து, கூரைப் பொருட்கள் மற்றும் உருக்கு போன்ற அடிப்படை கட்டடவாக்க உள்ளீடுகளின் விற்பனை களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒத்துச்செல்வதாக வுள்ளது.

1997 இல் போக்குவரத்துக் களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறை 7.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இத்துறையில் தொடர்பூட்டல் துணைத்துறை, இலங்கை ரெலிகொம் மற்றும் தனியார்துறைக் கம்பனிகள் ஆகிய இரண்டின் கீழும் உட்கட்டமைப்பு விரிவடைந்தமையிலிருந்தும் பெற்றுக் கொண்ட நன்மைகளினால் உயர்ந்த வளர்ச்சியைப் பேணியது. 1996 இல் 16 சதவீதத் தினால் வளர்ச்சியடைந்த துறைமுகப் பணிகள் 1997 இல் மேலும் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன. துறைமுகப் பணிகளின் வளர்ச்சி சரக்குக் கையாளல், கொள்கலன் தொகுதிகள் மற்றும் மாற்றுக் கப்பலேற்றல் என்பனவற்றில் காணப்பட்டது. இந் நடவடிக்கைகள் முறையே 18சதவீத, 24சதவீத, 16 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. கொழும்புத் துறைமுகத்துக்கு வருகைதரும் கப்பல்களின் எண்ணிக்கை 5 சதவீதத் தினால் அதிகரித்தது. இவ்வபிவிருத்திகளுடன் தேறிய பாரந்தூக்கி அசைவுகள் 1996இன் 23 இலிருந்து 1997 இல் 26 இற்கு அதிகரித்தமையின் மூலம் கொழும்புத் துறைமுகமும் வினைத் திறனில் மேம்பாட்டை எடுத்துக் காட்டியது. எனினும், திருகோணமலை மற்றும் காலித் துறைமுகங்களில் சரக்கு கையாளல் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தது. இவ்வபிவிருத்திகள் காணப்பட்டபோதும், துறைமுக நடவடிக்கைகளின் எதிர்கால அபிவிருத்திக்கு இன்னும் பல விடயங்கள் காணப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட இயலளவின் காரணமாக சரக்கு களைக் கையாள்வதில் கொழும்புத் துறைமுகம் இடர்பாடுகளை எதிர்நோக்கியமையின் விளைவாக சரக்குக் கப்பல்கள் காத்திருக்க வேண்டிய காலம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் கப்பல் திருத்தும் பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கம் துறைமுகப் பணிகள் துணைத் துறையின் சிறந்த செயலாற்றத்திற்கு உதவியது.

இலங்கை ரெலிக்கொம், மற்றும் தனியார் கம்பனிகளின் கீழான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 1996 உடன் ஒப்பிடுகையில் 1997இல் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது. இலங்கை ரெலிகொம்மின் கீழான புதிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 1996 இன் 22,800 உடன் ஒப்பிடுகையில் 1997 இல் 28,300 ஆகக் காணப்பட்டது. தனியார்துறை தொடர்பூட்டல் பணிகளின் கீழான புதிய வாடிக்கையாளர்கள் 1996 இறுதியின் 21,928 உடன் ஒப்பிடுகையில் 1997 இல் 35,616 ஆகக் காணப்பட்டனர். தொடர்பூட்டல் பணிகளின் வழங்கலில் இரு புதியவர்களான சன்ரெல், லங்காபெல் என்பனவற்றின் விரிவாக்க செயற்றிட்டங்களுடன் ஆண்டின் பின்னரைப் பகுதியில் இப்பணிகள் மேலும் மேம்பாடடைந்தன. அதே வேளை இலங்கை ரெலிகொம்மின் 35 சதவீதமான பங்குகள் யப்பானின் நிப்பொன் ரெலிகிறாப்பிக் அன்ட் ரெலிகொமினிகேசன் நிறுவனத்தினால் கையேற்கப்பட்டதும், நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதனூடான வினைத்திறன் மிக்க உற்பத்தி மற்றும் முகாமைத்து வத்துடன் கூடிய அதன் விரிவாக்க செயற்றிட்டங் களும் இத்துறையின் கூட்டிய பெறுமதி அதிகரிப்பத ற்குப் பங்களித்தன. தொலைத் தொடர்பூட்டல் துறையில் ஏற்பட்ட அபிவிருத்தியின் காரணமாக தொலைபேசிச் செறிவு அதாவது தொலைபேசி ஒன்றிற்கான ஆட்களின் எண்ணிக்கை 1996 இன் 72 இலிருந்து 1997 இல் 58 இற்கு முன்னேறியது. தொலைத் தொடர்பூட்டல் துறையின் விரிவானது தொலைபேசி எண்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் வசதி, சுருக்கச் சுழற்றும் முறை, ஆளில்லாத நேரப்பணிகள், அழைப்பிற்காகக் காத்திருத்தல், அழைப்புக்களை முன் அனுப்புதல் மற்றும் மாநாட்டு அழைப்புக்கள் போன்ற புதிய பணிகள்

அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக தரங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களுடனும் வினைத்திறனுடனும் ஒன்றிணைந்ததாக இருந்தது.

வீதி, புகைவண்டி மற்றும் விமான போக்குவரத்துப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்து துணைத்துறை 1997 இல் 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வீதிப் போக்குவரத்துப் பணிகள் விரிவடைந்தமைக்கு காரணம் வேளாண்மை, தயாரிப்பு, மற்றும் கட்டடவாக்கம் என்பனவற்றில் ஏற்பட்ட விரிவாக்கம் பொருள் போக்குவரத்திற்கான கேள்வியை அதிகரிக்க வழியமைத்ததேயாகும். சுற்றுலாக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சி விமான போக்குவரத்துப் பணிகள் மீட்சியடைவதனை இயலச் செய்தது. ஏயர் லங்காவின் பயணிகள் கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை 1996 இன் 3809 மில்லியனிலிருந்து 1997 இல் 4304 மில்லியனுக்கு அதிகரித்தது.

மொத்த விற்பனை, சில்லறை விற்பனை என்பனவற்றின் வளர்ச்சிக்கான தூண்டுதல் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து கிடைத்தது. உண்மை நியதிகளில், 1997 இல் இறக்குமதிகள் 10.5 சதவீதத்தினாலும் ஏற்றுமதிகள் 11.6 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. 1997இல் மொ.உ. உற்பத்தியில் மொத்த விற்பனையினதும் சில்லறை விற்பனையினதும் பங்குகள் 22 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பொதுவான மொ.உ.உற்பத்திக்கான இதன் பங்களிப்பு இவ்வாண்டில் 22.4 சதவீதமாகக் காணப்பட்டது.

1997இல் வங்கித் தொழில், உண்மைச் சொத்து மற்றும் நிதியியல் பணிகள் துறை 9.8 சதவீதங் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு நிதியியல் அமைப்பிற்குள் புகுந்த வெளிநாட்டு நிதிகளின் அதிகரித்த உட்பாய்ச்சல் என்பனவற்றின் காரணமாக வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மைக் கிடைப்பனவு அதிகரித்தது. நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு வர்த்தக வங்கிகளினது நிதிகளின் உண்மையான செலவினைக் குறைத்தன. வர்த்தக வங்கிகள் அவர்களது கடன் வழங்கல் வீதங்களை ஓரளவிற்குக் குறைத்தபோதும் வைப்பு வீதங்களை மேலும் கூடுதலாகக் குறைத்தமையின் காரணமாக கடன் வழங்கல் வீதத்திற்கும் வைப்பு வீதங்களுக்குமிடையிலான இலாப எல்லை அகலமாக்கப்பட்டது. இது பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து 1997இல் வர்த்தக வங்கித் தொழில்துறையின் இலாபத்தன்மை மீது சாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்தது.

**அட்டவணை 2.2**

**நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்**

| துறை | பெறுமதி கூட்டப்பட்ட (1982) நிலையான விலையில் (ரூ.மில்) | | | |
|---|---|---|---|---|
| | 1994 | 1995 | 1996 | 1997(அ) |
| காய்கறிகள் | 5,181 | 5,541 | 5,765 | 5,800 |
| துணை உணவுப் பயிர்களுக்கான உதவுதொகை (ஆ) | 3,602 | 3,673 | 3,687 | 3,466 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள்(இ) | 1,603 | 1,462 | 1,543 | 1,666 |
| கரும்பு | 257 | 287 | 279 | 254 |
| புகையிலை | 210 | 175 | 169 | 176 |
| விலங்கு வளர்ப்பு (ஈ) | 1,117 | 1,248 | 1,344 | 1,359 |
| ஏனையவை | 1,697 | 1,635 | 1,725 | 1,856 |
| மொத்தம் | 13,667 | 14,021 | 14,512 | 14,577 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

(ஆ) உபஉணவுப் பயிர்கள், உருளைக்கிழங்கு, மிளகாய், சிறியவெங்காயம், பெரிய வெங்காயம், பயறு, தட்டைப்பயறு மற்றும் குரக்கன் என்பவற்றை உள்ளடக்கும்.

(இ) சிறு ஏற்றுமதிப் பயிர்கள், கோப்பி, மிளகு, கறுவா, கராம்பு, மரமுந்திரிகை மற்றும் வெற்றிலை, என்பவற்றை உள்ளடக்கும்.

(ஈ) விலங்கு வளர்ப்பு பால், முட்டைகள், கோழி வளர்ப்பு மற்றும் ஏனைய இறைச்சி வகையை உள்ளடக்கும்.

1997இல் சுற்றுலா வருகைகள் 366,165 இனை எய்தி 1996 இனைவிட 21 சதவீதத்தினால் அதிகரித்தமையின் காரணமாக சுற்றுலாத்துறை மீட்சியடைந்தது. சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள் 1996 இன் ஐ.அ.டொலர் 166 மில்லியனிலிருந்து 1997 இல் ஐ.அ.டொலர் 209 மில்லியனுக்கு 26 சதவீதத்தினால் அதிகரித்தது. சுற்றுலா வருகைகள் வளர்ச்சியடைந்தமையின் காரணமாக, தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளின் அறைகளின் தங்கும் வீதம் 1996 இன் 39 சதவீதத்திலிருந்து 1997 இல் 48 சதவீதத்திற்கு உயர்வடைந்து சுற்றுலா விடுதிப்பணிகள் விரிவடைய வழிவகுத்தது.

## 2.3 செலவினம்

நுகர்வுச் செலவினம் மற்றும் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் என்பனவற்றைக் கொண்ட மொத்த உள்நாட்டுச் செலவினம் 1997 இல் ரூ. 953 பில்லியன் என மதிப்பிடப்பட்டு 13.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது

1997 இல் நுகர்வுச் செலவு ரூ 736 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் இது 1996 இன் ரூ.650 பில்லியனைவிட 13.1 சதவீத அதிகரிப்பினைக்

### அட்டவணை 2.3

(1982) நிலையான விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

| விடயம் | சதவீதப் பங்கு | | | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1995(அ) | 1996(அ) | 1997(அ) | 1996 | 1997 |
| 1. மொத்த மூலவளங்கள் | 100 | 100 | 100 | 100 | 3.2 | 7.7 |
| மொ.உ.உ. சந்தை விலைகள் | 68 | 67 | 67 | 66 | 3.8 | 6.4 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 32 | 33 | 33 | 34 | 2.1 | 10.5 |
| 2. பயன்பாடு | 100 | 100 | 100 | 100 | 3.2 | 7.7 |
| நுகர்வு | 60 | 59 | 59 | 59 | 3.4 | 7.2 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன வாக்கம் | 21 | 17 | 16 | 16 | 2.3 | 4.8 |
| அரசு | 3 | 2 | 2 | 2 | -7.6 | 13.6 |
| அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் தனியார்துறை | 18 | 15 | 15 | 14 | 3.7 | 3.7 |
| இருப்புக்களின் மாற்றம் | 0 | 0 | 0 | 0 | 150.0 | -92.4 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 19 | 24 | 24 | 25 | 3.2 | 11.6 |

(அ) தற்காலிகம் மூலம் : இலங்கை மத்திய வங்கி

கொண்டிருந்தது. மொத்த நுகர்வுச் செலவில் 87 சதவீதத்தினைக் கொண்டிருந்த தனியார் நுகர்வுச் செலவு 1996இன் ரூ.569 பில்லியனிலிருந்து 1997 இல் ரூ.644 பில்லியனுக்குஅதிகரித்து 13.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவு செய்தது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான தனியார் நுகர்வுச் செலவினமும் காரணியல்லாப் பணிகளும் உயர்ந்த வீதத்தில் அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகள் என்பனவற்றை உள்ளடக்கிய நீண்டகாலப் பாவனைப் பொருட்கள், வெளிநாட்டுப் பயணங்கள் என அழைக்கப்பட்ட பணிகள் என்பன மீதான நுகர்வுச் செலவினம் உயர்வடைந்தமையே காரணமாகும். உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் வகைக்குள் உணவு விடயங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் மீதான நுகர்வுச் செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவு செய்து, தனியார் நுகர்வுச் செலவினத்தின் மொத்த அதிகரிப்பில் 69 சதவீதத்திற்கும் கூடுதலான அதிகரிப்பிற்குப் பங்களித்தது.

1997இல் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ரூ.217 பில்லியனுக்கு 16.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தனியார் முதலீடு ரூ.169 பில்லியனாக விளங்கிய வேளையில் பொதுவான மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்திற்கான இதன் பங்கு 78 சதவீதமாக இருந்தது. தனியார் முதலீடுகள் அதிகரித்தமைக்கு முதலீட்டிற்கான சூழ்நிலை முன்னேற்றம் கண்டமையே முக்கிய காரணமாகும். ரூ.7,873 மில்லியன் (ஐ.அ.டொலர் 134 மில்லியன்) கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீடும் ரூ.10,602 மில்லியன்(ஐ.அ.டொலர் 176 மில்லியன்) கொண்ட தனியார் துறைக்கான நீண்டகால வெளிநாட்டு மூலதன மொத்த உள்பாய்ச்சலும் சேர்ந்து 1996 இனைப்போன்றே 1997 இலும் மொத்தத் தனியார் முதலீட்டில் 11 சதவீதத்தினை நிதியிட்டன. அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலதன இருப்பினை உயர்த்துவதற்கான உண்மைச் சொத்துக்களின் கையேற்பினைப் பிரதிபலிக்கும் அரசதுறையின் மூலதனவாக்கம் ரூ.30,000 மில்லியனுக்கு 27.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை 1997 இல் அரச தொழில் முயற்சிகளினதும் கூட்டுத் தாபனங்களினதும் முதலீடுகள் ரூ.49 பில்லியனுக்கு உயர்ந்து 1996 இன் 10 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.3 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தன.

அதிகரித்த மூலதனவாக்கம், 6 சதவீதத்தினால் அதிகரித்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. 1997 இல் உள்நாட்டு முதலீடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உள்ளடக்கம் 1996 இனைப் போன்றே 36 சதவீதத்தில் நிலையாகக் காணப்பட்டது. முதலீட்டுப் பொருட்களுக்குள் பொறிகளும் கருவிகளும் (5.3 சதவீதம்) போக்குவரத்துக் கருவிகள் (10.9 சதவீதம்), கட்டடப் பொருட்கள் (9.5 சதவீதம்) என்பனவற்றில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. 1997 இல் முதலீட்டுப் பொருட்களின்

### அட்டவணை 2.4

நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்

ரூ.மில்

| வகை | 1982 | 1995(அ) | 1996(அ) | 1997(அ) |
|---|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் | 99,238 | 667,772 | 768,128 | 890,485 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் | 11,770 | 102,111 | 117,691 | 154,450 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -1,959 | -6,958 | -11,258 | -9,934 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 5,494 | 34,820 | 39,242 | 46,449 |
| 5. தேறிய சேமிப்புக்கள் | 15,305 | 129,973 | 145,674 | 190,965 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 2) | 11.9 | 15.3 | 15.3 | 17.3 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 5) | 15.4 | 19.5 | 19.0 | 21.4 |

(அ) தற்காலிகம் மூலம் : இலங்கை மத்திய வங்கி

உள்ளமைப்பானது, முக்கியமாக தயாரிப்பு மற்றும் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர் பூட்டல் துறைகளில் மூலதனவாக்கம் காணப்பட்டதை எடுத்துக்காட்டியது. தயாரிப்புத்துறையுள் உயர்ந்த விகிதம் உணவும் குடிபானமும் புடவைகளும் ஆடைகளும் மற்றும் அணியும் ஆடைகள் என்பனவற்றில் ஈர்க்கப்பட்டிருந்தது.

## 2.4 மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

மொத்த உள்நாட்டு உற்பத்தி பொருட்கள் பணிகளின் இறக்குமதிகள் மற்றும் காரணியல்லாப் பணிகள் (வெளிநாட்டு மூலவளங்கள்) என்பனவற்றை உள்ளடக்கி பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்கள் 1996 இன் ரூ.1,105 பில்லியனிலிருந்து 1997 இல் ரூ.1278 பில்லியனுக்கு அதிகரித்தன. ரூ.173 பில்லியனைக் கொண்ட இவ்வதிகரிப்பானது நடைமுறைச்சந்தை விலைகளில் மொ.உ. உற்பத்தியில் ஏற்பட்ட ரூ. 122 பில்லியன் அதிகரிப்பினாலும் வெளிநாட்டு மூலவளங்களில் ஏற்பட்ட ரூ.51 பில்லியன் அதிகரிப்பினாலும் உருவாக்கப்பட்டதாகும். மொத்த மூலவளங்களில் 59 சதவீதம் நுகர்வின் மீதும் 16 சதவீதம் மூலதன உருவாக்கத்தின் மீதும் செலவிடப்பட்ட வேளையில் மிகுதி 25 சதவீதமும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதியில் பிரதிபலிக்கப்பட்டது.

நிலையான (1982) விலைகளில் மதிப்பிடப்பட்ட மூலவளங்களின் கிடைப்பனவு 1996 இன் 3.2 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதத்தினால் உயர்வடைந்தது. உண்மை நியதிகளில் நுகர்வுச் செலவினம் 1996 இன் 3.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1997 இல் 4.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் 1996 இன் 2.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1997 இல் 4.8 சதவீதத்தினால் அதிகரித்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட விரிவாக்கம் 11 சதவீதத்தினால் வேளாண்மை ஏற்றுமதிகளின் விரிவாக்கம் (9 சதவீதம்) என்பனவற்றினால் வழி நடத்தப்பட்டு பொருட்களின் ஏற்றுமதிகள் மற்றும் காரணியல்லாப் பணிகள் 11.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

## 2.5 தேசிய சேமிப்புக்கள்

1997 இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.154,450 மில்லியன் என மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 31 சதவீதம் கொண்ட மேம்பாட்டினை எடுத்துக்காட்டின. மொ.உ.உற்பத்திக்கான உள்நாட்டுச் சேமிப்புக்களின் விகிதம் 1996 இன் 15.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 17.3 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. அரசின் எதிர்க்கணிய சேமிப்புக்களில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் கூட்டுத்துறைச் சேமிப்புக்களின் உயர்ந்த மட்டம் என்பன 1997 இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் அதிகரிக்க உதவின. உள்நாட்டுச் சேமிப்புக்கள் மற்றும் தேறிய வெளிநாட்டு வருமானம் என்பனவற்றின் தொகை என வரைவிலக்கணம் செய்யப்பட்ட தேசிய சேமிப்புக்கள் ரூ.190,965 மில்லியனுக்கு உயர்வடைந்தன. இது மொ.உ.உற்பத்தியில் 21.4 சதவீதமாகும்.